Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 4, No.1, 2023, (83-89)

# பாரதியின் சுதேசி பாடத்திட்டமும் தாய்மொழிக்கல்வியும்

Bharti's indigenous curriculum and mother tongue education

**Ira Murugan**
Tamil Thurai, Periyar Government Arts College, Cuddalore, PQRM+VQ5, Silver Beach Rd, Devanampattinam, Tamil Nadu 607001, India

**Published:** 27 June 2023

**To cite this article (APA):** Murugan, I. (2023). பாரதியின் சுதேசி பாடத்திட்டமும் தாய்மொழிக்கல்வியும்: Bharti's indigenous curriculum and mother tongue education . *Journal of Valartamil*, *4*(1), 83–89. https://doi.org/10.37134/jvt.vol4.1.8.2023

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol4.1.8.2023

**ஆய்வுச் சுருக்கம்**: ஆங்கிலேயரின் காலத்தில் இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி முறையானது அவர்களுக்கான அடிமைகளை உருவாக்குவதாக இருந்தது. சுய சார்போடு வாழ இந்தியர்களுக்கு ஏற்ற பாடத்திட்டம், சுதேசி பாடத்திட்டம் சார்ந்த கல்வியாக இருக்க வேண்டும் என பாரதி விரும்பினார். ஆங்கிலேயரின் ஆங்கிலக்கல்வி இந்திய சமூகத்தில் ஏற்படுத்திய விரும்பத்தகாத விளைவுகளை பாரதி குறிப்பிட்டுக்காட்டி, சுதேசி பாடத்திட்டம் அமைய வேண்டியதன் அவசியம் குறித்த கருத்துக்களை இக்கட்டுரை ஆய்கின்றது.

**திறவுச் சொற்கள்**: பாடத்திட்டம், இந்தியக் கல்வி முறைகள், சுதேசிக் கல்வி, தாய்மொழிக் கல்வி, பாரதியின் கல்வி

**Abstract:** The system of education given to Indians during the British period was to make them slaves. Bharathi wanted the curriculum to be suitable for Indians to live independently, an education based on the Swadeshi curriculum. Bharti points out the undesirable effects of British English education on Indian society and explores the views on the need for an indigenous curriculum.

**Keywords:** Curriculum, Indian Education Systems, Bharathi's Education System

## முன்னுரை

கல்வி மனிதனின் அறிவினைச் செம்மைப்படுத்துவதாக அமைய வேண்டும். ஆங்கில அரசு இந்தியர்களுக்கு வழங்கிய கல்வியானது, அடிமைத்தனத்திற்கும் இந்தியச் சமூகங்களுக்கு உள்ள பெருமை வாய்ந்த மரபுகளைச் சிதைக்கும் வகையிலும் அமைந்து வருவதாக பாரதி உணர்ந்தார். அதனால் சிறுமையான நோக்கத்துடன் இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி முறையினை வெளிபடுத்திக் காட்டி, ஆங்கிலக் கல்விக்கு மாற்றாக இந்திய மக்களுக்கு சமூகமரபுகளைக் காக்கும் வகையிலான சுதேசியக் கல்வியை தாய்மொழியில் வழங்க வேண்டியதன் நிலை குறித்து இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

## கல்வி தராத ஆங்கில அரசைச் சாடுதல்

மனிதனைப் பண்படுத்தும் வேலையைச் செய்வதே கல்வியின் செயல். கல்வியினால் மாற்றம் பெற்ற மனிதனே சிறந்த சமூகத்தை அமைக்கிறான். சமூகத்தின் கூட்டமைவான நாடு வளம்பெறக் கல்வி என்பது அவசியமானதாகிறது. கல்வி இல்லாத சமூகத்தில் தலைமை வகிப்போர், சமூக ஆக்கம் கருதிக் கல்வி அளித்தலை அவர்களின் கடமையாகக் கொள்ள வேண்டும். சொந்த நாட்டைப் போலவே பிறர் நாட்டை அடிமைப்படுத்தி ஆள்வோர்க்கும் இது பொருந்தும்.

பாரதியின் காலம், ஆங்கிலேயரின் பிடியில் இந்தியா வசப்பட்டிருந்த காலம். இந்தியர்களுக்குக் கல்வி போதித்தல் ஆங்கிலேயரின் கடமை என்பதைப் பத்திரிக்கைகளின் வாயிலாகக் குறிக்கிறார் "ஓர் பெருஞ்சாதியாரை ஆளுகின்ற அரசாங்கத்தார், அச்சாதியாரின் முதலவசியமாகிய கீழ்த்தரக்கல்வியை அளிப்பதற்குத் திரவியஞ் செலவிடாமல் பின்னெதற்குத்தான் செலவிடப்போகிறார்கள். கவர்ன்மெண்டாரின் வீண்செலவைக் குறைப்பதற்குப் பதினாயிரம் வழிகளிருக்கின்றன." என்று அவர்களைச் சாடுகிறார். ஆயினும் அடிப்படைக் கல்வியை (Primary Education) முதல் அவசியமாகக் குறிக்கிறார். கல்வித் தெளிவு பெற்றவர்கள் தேச விடுதலைக்காகப் போராடுவர். தேச விடுதலையை அளிக்க விரும்பாததாலேயே ஆங்கில அரசு கல்வியை அளிக்கவில்லை என்பதாகக் குறிக்கிறார். தேச நலனில் அக்கறை கொண்டவர்கள் கல்வியை அளிப்பார்கள். மாறாக அடிமையாகவே நம்மைக் காலம் முழுதும் வைத்திருக்க நினைப்பதாலேயே ஆங்கில அரசு கல்வியை அளிக்க முன்வரவில்லை என்கிறார். அந்நியர்களும் தமிழ் வழிக்கல்வி பற்றிய சிந்தனையில்லாமல் ஆங்கில வழிக் கல்வியையே வலியுறுத்தினர்.

## ஆங்கில கல்வியின் இழிநிலை

அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் இந்தியா பல ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. மேலைநாட்டாரின் தாக்கம் இந்தியா முழுதும் பரவியிருந்தது. மொழியும் இதற்கு விதிவிலக்கல்ல. அந்நியரின் இம்மொழி பேச்சு மொழியாக இல்லாமல் கல்வி மொழியாகவே ஆதிக்கம் கொண்டது. "ஆங்கிலேயராதிக்கத்தில் கிறிஸ்தவமும் ஆங்கிலக் கல்வியும் ஏற்படுத்திய தாக்கம் இந்து சமய மரபின் அடித்தளத்தில் ஆட்டம் காண வைத்துவிட்டமையை இந்துக்கள் உணர ஆரம்பித்தனர். இதன் பேறாக, இந்துப்பண்பாட்டுப் பாதுகாப்புக்கான பலமான சமூக சமய இயக்கங்களை முடுக்கிவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வரலாற்று ரீதியான விசேட நிலைமைகளால் தமிழகமும் வடஇந்தியாவில் மேற்கே மராட்டியமும், கிழக்கே வங்காளமும் தத்தமக்கேயுரிய இயக்கங்களை பத்தொன்பதாம் நூற்றாண்டில் கட்டமைத்துக் கொண்டன. கூட்டமைவான சமூக, இயக்கங்கள் செய்ய வேண்டிய வேலையான, ஆங்கில மதம், மதக்கல்வி எதிர்ப்பு போன்றவற்றை தனி ஒருவராகவே நின்று எதிர்த்தவர் பாரதி" இதன் மூலம் சமய மரபு மற்றும் பண்பாட்டுக் கூறுகளை காத்தெடுத்தார் என்பது புலனாகும்.

பாரத நாட்டில் தமிழ் மொழியை விடுத்து அந்நிய மொழிகள் கல்வி மொழியாகிவிட்டனவே என்று மனம் கொதிக்கிறார். கல்வி மொழியாகும் ஆங்கிலமே தற்போது பள்ளி மொழியாக விளங்கி நாளடைவில் அதுவே தேசிய மொழியாகிவிடும் எனக் கருதினார். அயல் மொழி இருக்கும் இடத்தில் சுதேசிய மொழியை வைக்க நினைத்த பாரதி மனம் தளராது பாடுபட்டார். ஒரு தேசத்தின் வளர்ச்சி அந்தத் தேசத்தின் மொழியையே நம்பியுள்ளது எனும் கொள்கையில்

கருத்து மாறுபாடு இல்லாதவராகத் திகழ்ந்தார். தாய்மொழியின் சிறப்பைப் பேசிய அவர் அதேசமயம் அந்நிய மொழி வழிக் கல்வியை இழித்துப் பேசவும் தயங்கவில்லை.

தமிழ் வழிக் கல்வி பயிலாத ஸ்ரீ யுக்த சுபோத சந்திர மல்லிக் என்பவர் சுதேசிய கலாசாலை நிறுவுவதற்காக ரூபாய் நான்கு லட்சம் உதவ முன்வந்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டி அவரின் தமிழ்ப்பற்றை நம்மவர்களின் மனத்திலே விதைக்கிறார். அதோடு தமிழ்வழிக் கல்வி பயிலாமல் ஆங்கில வழிக் கல்வி பயின்றதற்காக மனம் வருந்தும் சந்திரமல்லிக்கின் நிலையை, "இக்காலத்தில் வழங்கி வரும் இழிந்த கல்வி முறைப்படி கல்வி கற்ற யான் நம் சுய பாஷையில் உங்களுடன் பேச முடியாதவனாயிருக்கிறேனென்று ஒப்புக் கொள்ள வெட்கப்படுகிறேன் என்று சொன்னார். அவ்வித வெட்க உணர்ச்சி நம்மவருள் எத்தனை பேருக்கிருக்கின்றதோ" என்று புலப்படுத்துகிறார். தமிழர்களின் இழிநிலையைப் பேசிய பாரதி அவர்களின் தன்மான உணர்வையும் தட்டி எழுப்பி விடுகிறார்.

தேசிய விடுதலைக்கு உதவாத ஆங்கில மொழி வழிக்கல்வி பயின்றவர்கள் மனசாட்சிப் படியும், அறிவுப் பயிற்சிக்குத் தகுந்த படியும் நடக்கும் பண்பு இல்லாமல் தரங்கெட்டவர்களாக இருப்பர் என்றும் ஆங்கில வழியில் கல்வி போதிக்கும் கல்விச்சாலைகளை விலங்கினங்கள் வாழும் கொடிய குகை என்றும் தன் மன வேதனையை வெளிப்படுத்துகிறார்.

இத்தகைய ஆங்கிலக் கலாசாலைகளில் படிப்பவர் எவ்வளவுதான் படித்தாலும் படிப்பை முடித்துவிட்டு ஒரு வேலைக்கும் உதவாதவர்களாகவே நிற்கின்றனர் என்று அறிவுத் தெளிவுக்கு வழி வகுக்காத ஆங்கிலக் கல்வியைக் குறைவாகப் பேசுவதோடு ஆங்கிலக் கல்வி பயின்றோர் வெறும் கணக்கன் வேலைக்குத்தான் தகுதியாவர் என எள்ளல் கலந்து ஆங்கில வழிக் கல்வியின் இழிநிலையை உணர்த்துகின்றார். ஆங்கிலவழிக் கல்விச் சாலைகளில் இந்திய மாணவர்களுக்குச் சுதந்திரம், சுயராச்சியம், சுயகவுரவம் போன்ற சுதேசியம் சார்ந்த எந்த ஒரு செயலையும் கற்றுத் தராததே பாரதியின் கோப மனநிலைக்குக் காரணம்.

மாணவர் நலனில் அக்கறை கொள்ளாததும், வேலைவாய்ப்பை அளிக்காததுமான இக்கல்வியைப் பயிலும் மாணவர்கள் மன விரக்தியடைந்து விரைவிலேயே முதுமைப்பருவம் எய்தி விடுகின்றனர் என்கிறார். அந்நிய மொழியான ஆங்கிலத்தைக் கற்றுப் புரிந்து கொள்ளுதல் எளிதான காரியமல்ல. இக்கல்வி முறையால் ஓரளவு பேசமுடிகிறதேயொழிய அப்பாடத்தில் ஆழ்ந்த அறிவு பெறமுடியாது. ஆங்கிலக் கல்வி முறை இந்தியர்களுக்கும் இந்தியப் பண்புக்கும் பொருந்தாது என்பதனை "ஆங்கிலப் பள்ளிகளில் படித்துவிட்டு, சாயந்திரம் வீடு திரும்பும் எந்தச் சிறுவனின் முகத்தையும் பாருங்கள், அதில் பலமோ, சந்தோஷமோ, வீரமோ வேறு நற்குணங்களோ தென்படுகின்றதா? முகம் வாடி வதங்கி, நோய் பீடித்ததாகவேயுள்ளது. அவனது உடல் பலமிழந்து, மெலிந்து எதற்கும் பிரயோஜனமற்றதாகவே இரக்கிறது. இவ்வாறாக பி.ஏ. படித்து முடிப்பதற்குள் ஒருவன் பாதி கிழம் ஆகிவிடுகின்றான்" எனும் கருத்து புலப்படுத்துகிறது. இந்தியாவில் கற்பிக்கப்படும் சுய உணர்வை வளர்க்காத ஆங்கில வழிக் கல்வியை அவர் ஒதுக்கித் தள்ளினார்.

## சுதேசிய கல்வி

பாரதியின் அனைத்துச் செயல்பாடகளும் தேசியம் குறித்ததாகவே இருந்தன. முப்பது கோடி மக்களையும் ஒருங்கு திரட்டி ஒவ்வொரு தனிநபரையும் உரமேற்றியதனைச் சான்றாக்கலாம். கல்வி நிலையில் பாரதியின் கல்விக் கொள்கையாகத் தோன்றியதே தேசியக் கல்வி (National Education) . தேசியக் கல்வியைக் கட்டமைக்கும் பாரதிக்குச் சுதேசியக் கல்வியே அடிப்படையாக இருந்தது. தேசியக் கல்வி என்பதற்குப் பொருள் கூற வரும் பாரதி, "தமிழ்நாட்டில் தேசியக் கல்வி என்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையைப் பிரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால் அது தேசிய என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே பிரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை இதை மறந்துவிடக் கூடாது" என்கிறார். தாய்மொழி வழியான கல்வியே தேசியக் கல்வி என்றும் அவ்வாறு இல்லாத கல்வி தேசியக் கல்வி இல்லையென்றும் குறிக்கிறார். அவரவர் தாய்மொழியில் பயின்றால் தேசியக்கல்வி வலுப்பெறும் என நினைத்தவர் மகாகவி. பாரதியின் இந்திய தேசிய ஒருமைப்பாடே அவரை இவ்வாறு எண்ண வைத்தது எனக் கருதலாம். தேசத்தின் வாழ்வுக்கு மேன்மைக்கும் தேசியக்கல்வி இன்றியமையாதது. தேச ஒற்றுமைக்கு வழிவகுக்கும் தேசியக் கல்வியைக் கற்றுத்தராத தேசத்தைப் பாரதியார் மனிதப் பிசாசுகள் கூடிவாழும் விசுதாரமான சுடுகாடு என்று கூறித் தனது கோபக்கனலைத் தெறிக்கிறார்.

## சுதேசக் கல்வியை அளித்தல்

தேச விடுதலைக்குத் தேவையான சுதேசியக் கல்வியை அளிக்குமாறு பாரதி பெரிதும் விரும்பினார். நம் தேச இளைஞர்கள் விரைவில் இறந்து போவதற்குக் காரணம் ஆங்கில வழிக்கல்வியே என்பதில் நம்பிக்கை கொண்டிருந்த பாரதி தமிழ்நாட்டிற்குத் தேவையான தமிழ்வழிக் கல்வியை அளிக்க வற்புறுத்தினார். அந்நியர் ஆட்சியர் கீழ் இருப்பதால் அவர்களின் மொழியைத் தெரிந்திருத்தல் அவசியம் என்பதை வலியுறுத்தும் பாரதி அதே சமயம் மற்ற பாடங்களான வேதியியல், வானவியல், பூமி அறிவியல், கணிதம் போன்ற பிற பாடங்களைச் சுதேச மொழியிலேயே அளிக்க விரும்புகிறார். தேச இளைஞர்களுக்குக் குறைவான சிரமமும், சுயநம்பிக்கையும் இதனால் ஏற்படும் என்பது பாரதியின் அசைக்க முடியாத நம்பிக்கை.

சிறுவயது முதலே பள்ளிக் கல்வியோடு சேர்த்து அளிக்கப்படும் சுதேசியச் சிந்தனையே மாறாது நிலைத்து நிற்கும். சுதேசியம் என்பதையே உணராமல் ஆங்கில வழிக்கல்வி பயிலும் நம் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இங்கிலாந்தின் தேசாபிமானக் கல்வியைச் சான்று காட்டுகிறார். "இங்கிலாந்து முழுவதும் பூகோள சாஸ்திர எல்லைப்படி மாத்திரமேயல்லாமல் யதார்த்தமாகவே ஒரே உயிருள்ள தேசமென்பதும், அதனிடத்து அன்பு கொண்டு, அதற்காக வேண்டிய விடத்து உயிர் கொடுக்க நிச்சயங்கொண்டிராத ஆங்கிலேயன் மக்களுட் பதடி யாவானென்றும் ஒவ்வொரு முக்கிய பாடசாலையிலேயும் கற்பிக்கப்படுகின்றது. இந்த எண்ணத்துடனேயே ஒவ்வொரு ஆங்கிலேயனும் வளர்கிறான்" என்று இங்கிலாந்தின் தேச உணர்வைச் சுட்டிக்காட்டும் பாரதி, தேச உணர்வு கற்பிக்கப்பெறாத பாடசாலையின் கல்வி முறை வெறும் மண்ணாகுமே தவிர ஒன்றுக்கும் உதவாது என்கிறார். தேசபக்தியைக் கற்பிக்காமல் வெறும் சம்பளத்திற்காக மட்டுமே வேலைசெய்யும் உபாத்தியாயர்களைப் 'பகிஷ்காரம்'

செய்வதோடு அவர்களுக்குக் கீழ்ப்படியாவும் கூடாது. குருபக்தி செலுத்துவதும் அவசியமில்லை என்பது பாரதியின் கருத்து. மேற்சுட்டிய எண்ணம் கொண்ட ஆங்கிலேயர் நடத்தும் கல்விச் சாலைகளுக்கு இந்துக்கள் பிள்ளைகளை அனுப்புதலைக் 'கையாலாகாத் தனம்' என்று கூறி எந்த அளவுக்கு இழிவாகக் கூறமுடியுமோ அந்த அளவுக்கு இழிவுபடுத்துவதன் மூலம் தமிழர்களின் தேசிய உணர்வினைத் தட்டி எழுப்புகிறார். இந்த அவல நிலையைப் போக்கச் சுதேசிய முயற்சிகளை மேற்கொள்ள அறிவுறுத்துகிறார்.

## சுதேசக் கல்விச்சாலை நிறுவுதல்

தேசாபிமானம், மதாபிமானம், சுயராச்சியம் போன்ற எந்தவிதமான விடுதலை உணர்வுச் சிந்தனைகளையும் அளிக்காத கல்விச் சாலைகளுக்கு மாணவர்களை அனுப்புவதை விடுத்து நமக்கு நாமே எனும் முறையில் தேவைக்கேற்பப் பள்ளி, கல்லூரி போன்றவைகளை நிறுவிக்கொள்ள வேண்டுமென்கிறார். எந்த ஒரு செய்தியைப் பேசினாலும் அதற்கான தீர்வைத் தருவதே பாரதியின் சிறப்பு. சுதேசப்பள்ளிகள், கல்லூரிகள் போன்றன நிறுவும் முன் பாதிரிகளால் வடிவமைக்கப்பட்ட பொய்ச்சுதந்திரம் போன்ற பாடங்களை நீக்கிவிட்டு, தேசபக்தியும் நவீன அறிவும் கலந்த சிந்தனைகளைப் பாடமாக்க வேண்டும் என்பதோடு, போதுமான அளவுக்குப் பணம் குவித்து வைத்திருப்பவர்கள் பச்சையப்பன் கல்லூரி போன்ற சுதேசியக் கல்லூரிகளையும், பள்ளிகளையும் பாதிரிப்பள்ளிகளுக்கு நிகராகப் பலப்படுத்த வேண்டுமென்கிறார். பாதிரிகளால் வடிவமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டம், சமூக அமைப்பில் பாதிரிகளின் பள்ளிகள் உயர்நிலையிலிருத்தல் போன்றவற்றைப் பாரதியின் கூற்றால் உணர்ந்து கொள்ளமுடிகிறது.

பிறந்ததன் பயன் வெறுமனே பணம் சம்பாதித்தல் மட்டுமே எனும் நோக்கமுடைய பெரும்பணக்காரர்கள் சுதேசியக்கல்வி முயற்சிக்கு ஒத்துழைக்க வேண்டுமென அழைப்பு விடுக்கிறார். சுதேசக்கல்வி முயற்சிக்கு உடன்படாதவனைத் தூர எறி எனக் கோபம் கொப்பளிக்கப் பேசுவதை, "நமது தாய் தனது சொந்த மக்களிடம் கை நீட்டிப் பணம் கேட்கிறாள். குவித்து வைத்துக் கொண்டு இவளுக்கு இல்லை என்பதாக எவன் சொல்கிறான்? அவனைத் தூர எடுத்தெறி அவன் நம்மைச் சார்ந்தவனல்லன். அவன் அதாரியன்" எனும் கனல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன. மேற்சுட்டிய கூற்றில் வரும் 'இவன் நம்மைச் சார்ந்தவனல்லன்' எனும் சொல்லாடல் மூலம் தேசத்தாய்க்குப் பணம் கொடுக்காதவர்கள் நம்முடைய தேசத்தாய்க்குப் பிறக்காமல் அந்நிய தேசத்தாய்க்கே பிறந்தவர்கள் என்ற பொருளில் கடுமையாகச் சாடுகிறார்.

பணம் படைத்தவர்களைச் சாடிய பாரதி, தேசத்தலைவர்களுக்குச் சாட்டையடி கொடுக்கத் தயங்கவில்லை. கல்கத்தாவிலே சுதேசியப் பல்கலைக்கழகம் ஒன்றை அப்பகுதி தேசத்தலைவர்கள் ஆரம்பித்ததைச் சுட்டிக்கட்டி, சென்னை மாகாணம் என்ன செய்கிறது? என்று கேள்வி கேட்டுத் தம்முன் அரசியல் தலைவர்களையே கைகட்டி நிற்க வைத்துவிடுகிறார். 'சுதேசியக் கல்வி' நடைபெற வேண்டுமானால் அகரம் முதல் னகரம் இறுதியாக உடைய அனைத்துச் செயல்பாடுகளும் தமிழிலேயே நடந்தேற வேண்டும் என்பதே பாரதியின் எண்ணம். இதனை, "பாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டால், அங்கு நூல்களெல்லாம் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவது மட்டுமன்றிப் பலகை, குச்சி எல்லாவற்றுக்கும் தமிழிலேயே பெயர் சொல்ல வேண்டம்; 'ஸ்லேட்' 'பென்ஸில்' என்று சொல்லக்கூடாது" என்று சுதேசியக் கல்வியில் தமிழின் அவசியத்தை வலியுறுத்திப் பேசுகிறார். தேசக்கல்வியை அளிக்கும்போது

எந்தவிதமான மதவேறுபாடும் கருதாமல், அனைத்து மதத்தினரும் ஒன்று என்ற உணர்வுடனே அளிக்கப்பட வேண்டும் என்கிறார். அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றுபடுத்தி, தமிழ் வழிக்கல்வியான சுதேசியக் கல்விக்கு அடித்தளமிடுகிறார். சிறுவயது முதலே இருந்த ஆங்கிலக் கல்வியின் மீதான வெறுப்பே அவரின் தீவிரமான சுதேசியக் கல்விக்கு அடிப்படை என்பதில் ஐயமில்லை.

## பாதிரி கல்வியை வெறுத்தல்

மேலை நாடுகளிலிருந்து இந்தியா வந்த கிறித்தவர்கள் முதன் முதலாக மதம் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். இம்முயற்சிக்கு மொழியைத் துணையாகப் பயன்படுத்திக் கொண்டனர். தமிழ்மொழியின் மூலமே தங்களுக்குச் சாதகமான அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டனர். முதலில் தமிழ் வழிக் கல்வியைப் புகுத்திப் பின்னர் ஆங்கில மொழிக் கல்விக்கு அடித்தளமிட்டனர். கல்வியின் வாயிலாக மொழியை நிலைநிறுத்திய மேலைநாட்டார், மொழியைத் தொடர்ந்து மதம் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். அக்காலச் சூழலில் தீவிர சிந்தனையுடன் இந்திய தேசிய விடுதலைக்குப் பாடுபட்ட பாரதியால் இக்கல்வி முறையை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. “பாரதியைப்போலவே காந்தியடிகளும் பாதிரிகளால் நடத்தப்பெறும் பள்ளிகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதை, இந்தியக் குழந்தைகளுக்கென்று கிறித்தவப்பாதிரியார்கள் வைத்திருக்கும் பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படும் கல்வி எனக்கும் பிடிக்கவில்லையாதலால் என் குழந்தையை அங்கே நான் அனுப்பத் தயாரில்லை. இதற்கு ஒரு காரணம் அங்கே ஆங்கிலத்திலே எல்லாப்பாடங்களும் போதிக்கப்பட்டு வந்ததாகும்.” வெறும் மதக்கருத்துக்களைப் போதித்தல் என்பதோடல்லாமல் இந்து மதத் தலைவர்கள் பற்றிய தவறான கருத்துக்களும் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டன. இந்திய தேசத் தலைவர்கள் பற்றிய வீரவரலாற்றை மாணவர்களுக்குப் போதிப்பதன் மூலம் விடுதலை உணர்வை வளர்க்க முடியும் எனக் கருதினார். மிஷன் பாடசாலைகளோ தேசத்தலைவர்கள் குறித்த தவறான சிந்தனையை நம் மாணவர்களின் மனதில் விதைக்கின்றன. முன்மாதிரியாக (Roll Model) யாரையும் கருதாத இம்மாணவர்கள் ஒழுக்கநிலையில் தவறிவிடுவார்கள் என மனம் பதைக்கிறார். இந்திய தேச மாணவர்களின் மனதைச் சிதைக்கும் மிஷன் பாடசாலைகளுக்குத் தம் பிள்ளைகளை அனுப்பும் தந்தையாரைத் தேசத்துரோகியாகக் கருதவேண்டுமென்கிறார்.

மிஷன் பாடசாலை ஆசிரியர்களின் இச்செயலுக்கு அவர்களைக் குறை சொல்லக்கூடாது. நம் தேசத்தலைவர்கள் பற்றிய அறிவு பாதிரிமார்களுக்கு இருக்கவில்லை. அவர்களைப் பற்றி அறிந்துக் கொள்ளவும் பாதிரிகள் முயலவில்லை. சம்பளத்திற்காக மட்டுமே வேலை செய்யும் பாதிரிமார்களைக் குறைசொல்வதால் பயன் இல்லை எனும் பாரதி, பாதிரியார்களைக் கண்டிக்காமல், மிஷன் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் மாதிரியையே விரோதிக்கிறோம் என்று ஆங்கில ஆட்சிலேயே அந்நியர்களுக்கெதிராகக் கண்டனக் குரல் எழுப்புகிறார்.

கிறித்தவப் பாதிரியார்கள் மதத்தை வளர்க்கக் குழந்தைப் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்துகிறார்கள். இப்பள்ளிக்கூடப் பெண்கள் பைபிள் வாசிப்பதைக் கேட்ட பாரதி, மதத் தலைவர்கள் மீதும் கேள்விக் கணையைத் தொடுக்கிறார். இது தொடர்பாகக் கிறித்தவர்களைக் குறை கூறுதல் முட்டாள் தனம் என்னும் பாரதி குற்றத்தையெல்லாம் இந்தியர்களின் மீதே குறிக்கிறார். அந்நியரைக் குற்றம் சொல்லாது தனது சொந்த நாட்டினரின் கடமை தவறியபோக்கைச் சுட்டிக் காட்டிக் காட்டுவது மகாகவியின் உயர்ந்த எண்ணத்தைப் புலப்படுத்துகிறது.

## அடிக்குறிப்புகள்

சீனி. விசுவநாதன் (தொகுப்), பாரதியின் காலவரிசைப்படுத்தப்பட்ட படைப்புகள், தொகுதி-5, ப.515.
ந. இரவீந்திரன், இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும். ப.94.
சீனி. விசுவநாதன் (தொகுப்), பாரதியின் காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி-2, ப.222.
ஆ.இரா. வேங்கடாசலபதி, பாரதியின் விஜயா கட்டுரைகள், ப.383.
சுப்ரமண்ய பாரதியார், பாரதியார் கட்டுரைகள், ப.371.
சீனி. விசுவநாதன் (தொகுப்), பாரதியியல்-அறியப்பட வேண்டிய உண்மைகள், ப.26.
மேலது, காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி - 1, ப.497.
சுப்ரமண்ய பாரதியார், பாதியார் கட்டுரைகள், ப.401.
மகாத்மா காந்தி, சத்திசோதனை, ப.228.
சுப்ரமண்ய பாரதியார், பாதியார் கட்டுரைகள், பக். 372-373.

## REFERENCES

Sugar. Viswanathan (ed.), Chronological Works of Bharati, Vol-5, p.515.
Na. Ravindran, Hinduism and Hindu Emancipation. p.94.
Sugar. Viswanathan (ed.), Chronological Works of Bharathi, Vol-2, p.222.
A. Ira. Venkatasalapati, Bharati's Vijaya Essays, p.383.
Subramanya Bharatiyar, Bharatiyar Essays, p.371.
Sugar. Viswanathan (ed.), Bharatiya-Facts to Know, p.26.
Also, Chronological Works of Bharati, Vol – 1, p.497.
Subramanya Bharatiyar, Pathiyar Essays, p.401.
Mahatma Gandhi, Testimony, p.228.
Subramanya Bharatiyar, Pathiyar Essays, p. 372-373.